# அரசுத்தேர்வுகள் இயக்ககம், சென்னை – 6.

## பத்தாம் வகுப்பு – பொதுத்தேர்வு – மார்ச்– 2017

## தமிழ் முதல் தாள் – விடைக்குறிப்புகள்

மொத்த மதிப்பெண்கள் : 100

விடைத்தாள் மதிப்பிடும்போது கீழ்க்குறிப்பிட்டுள்ள வழிமுறைகளைத் தவறாது பின்பற்றுதல் வேண்டும்

1. நீலம் மற்றும் கருப்பு மையினால் எழுதப்பட்டுள்ள விடைகள் மட்டுமே மதிப்பீடு செய்யப்பட வேண்டும்.

2. விடைகள் சொந்த நடையில் தெளிவாக அமைந்து, கருத்துப்பிழை, தொடர்பிழை, சொற்பிழை, எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை இல்லாதிருப்பின் முழு மதிப்பெண் வழங்குதல் வேண்டும்.

3. எழுத்துப்பிழை, ஒற்றுப்பிழை, இலக்கணப்பிழை ஒவ்வொன்றிற்கும் கால் மதிப்பெண் வீதம் குறைத்து அவ்வாறு குறைக்கும் மதிப்பெண் எக்காரணம் கொண்டும் வினாவிற்குரிய மதிப்பெண்ணில் நான்கில் ஒரு பங்கிற்கு மேல் மிகாமல் இருத்தல் வேண்டும்.

4. மனப்பாடப் பாடல்கள் சீர் பிரிக்கப்பட்டு, அடிகள் உரிய வகையில் அமைந்து, நிறுத்தற்குறிகள் சரியாக இடப்பட்டிருந்தால் மட்டுமே முழு மதிப்பெண் வழங்க வேண்டும்.

5. பிரிவு ‘V’ - நெடுவினாக்களுக்கான விடைகள் பத்தி பிரிக்கப்பட்டும், உள்தலைப்பு இடப்பட்டும் உரிய இடங்களில் செய்யுள் மேற்கோள் கொடுக்கப்பட்டும் இருந்தால் மட்டுமே முழு மதிப்பெண் வழங்க வேண்டும்.

6. தவறான விடைகளைக் (X) குறியிட்டும், தொடர்பிழைகளை அடிக்கோடிட்டும், ஒற்றுப்பிழைகளை (^) குறியிட்டுக் காட்டியும் விதிப்படி அவற்றிற்குரிய மதிப்பெண்களைக் குறைத்தல் வேண்டும்.

7. மதிப்பெண் வழங்கப்படுகின்ற ஒவ்வொரு சரியான கருத்திற்கும் தனித்தனியே (✓) குறியிடுதல் வேண்டும்.

8. மிகையாக விடையிருப்பின் ‘மிகை’ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

9. ஒரே விடை மீண்டும் எழுதப்பட்டிருப்பின் ‘மீண்டும்’ என்று குறிப்பிட்டு அடித்தல் வேண்டும்.

Scanned by CamScanner

பிரிவு – I மதிப்பெண்கள் : 20

## பகுதி – 1

| | | | 6X1=6 |
|---|---|---|---|
| I. உரிய விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதுக | | | |
| 1. | இ) பாரதிதாசன் | 1 | |
| 2. | ஆ) சேர | 1 | |
| 3. | இ) நற்றிணை | 1 | |
| 4. | ஆ) உலவு | 1 | |
| 5. | இ) திரு.வி.க | 1 | |
| 6. | ஆ) இராமலிங்கர் | 1 | |

## பகுதி – 2

| | | | 6X1=6 |
|---|---|---|---|
| II. கோடிட்ட இடத்தை நிரப்புக. | | | |
| 7. | பெரியபுராணம் | 1 | |
| 8. | புலி | 1 | |
| 9. | வரப்புகளாக | 1 | |
| 10. | பாவாணர் | 1 | |
| 11. | நகர்த்தும் வண்டியில் | 1 | |
| 12. | கடல் | 1 | |

## பகுதி – 3

| | | | 4 X1=4 |
|---|---|---|---|
| III. பொருத்துக | | | |
| 13. | இடர் – துன்பம் | 1 | |
| 14. | இறை – தலைவன் | 1 | |
| 15. | பணை – மூங்கில் | 1 | |
| 16. | செத்தை – குப்பைகூளம் | 1 | |

## பகுதி – 4

| | | | 4 X1=4 |
|---|---|---|---|
| IV. விடைக்கேற்ற வினா அமைக்க ( வினா சரியாக அமைந்திருப்பின் மதிப்பெண் வழங்கவும்) | | | |
| 17. | அம்பேத்கர் இந்தியா திரும்பிய பின் எத்தொழிலை மேற்கொண்டார் ? | 1 | |
| 18. | எதனை மனித நாகரிகத் தொட்டில் என்பர் ? | 1 | |
| 19. | பெரியார் எத்தகைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தார் ? | 1 | |
| 20. | இளைஞர்கள் உள்ளத்தில் எந்தெந்தப் பற்றுகள் வளரும் வகையில் கல்வி அமைதல் வேண்டும் ? | 1 | |

Scanned by CamScanner

## பிரிவு –II
## (மதிப்பெண்கள் 20)
### பகுதி – 1

| | | 5 X2=10 | |
|---|---|---|---|
| **V. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்** | | | |
| 21. | ✠ காலமறிந்து, இடத்தோடு பொருந்தச் செயல்பட்டால்<br>✠ உலகத்தையே அடைய விரும்பினும் கைகூடும். | 1<br>1 | 2 |
| 22. | ✠ பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று.<br>✠ ஏலம், இலவங்கம், சிறுநாவற்பூ, சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றாலான மருந்துப் பொருளுக்கு ஏலாதி என்று பெயர். | 1<br>1 | 2 |
| 23. | ✠ இருள் போன்ற நீண்ட முடியுடைய தலை, மண்ணில் படிய கீழே விழுந்து வணங்கினான்.<br>✠ எழுந்து உடலை வளைத்து தன் வாயைக் கையால் பொத்தி, அடக்கமாக நின்றான். | 1<br>1 | 2 |
| 24. | ✠ களவு, பொய், காமம், சினம் முதலிய குற்றங்கள் நீக்கியவர். | 2 | 2 |
| 25. | * அதிவீரராமபாண்டியன் (அ) பிள்ளைப்பாண்டியன்.<br>* வில்லிபுத்தூரார்.<br>* ஒட்டக்கூத்தர். | 2 | 2 |
| 26. | ✠ நல்லவர் ஒருவரின் நட்பைக் கைவிடுவது, பலரைப் பகைத்துக் கொள்வதைவிட பன்மடங்கு தீமை உடையதாகும். | 2 | 2 |
| 27. | ✠ வடமொழி<br>✠ தென்மொழி | 1<br>1 | 2 |

### பகுதி – 2

| | | 5 X2=10 | |
|---|---|---|---|
| **VI. எவையேனும் ஐந்தனுக்கு மட்டும்** | | | |
| 28. | ✠ மூவாயிரம் | 2 | 2 |
| 29. | ✠ பல்வகை விலங்குகளின் வாழ்க்கை, பன்னாட்டு மக்களின் வாழ்க்கை.<br>✠ வாழ்க்கையில் நேரில் காண முடியாத பல இடங்களையும் நேரில் பார்ப்பதனைப் போலவே காட்டுகிறது. | 1<br>1 | 2 |
| 30. | ✠ பட்டினப்பாலை<br>✠ மதுரைக்காஞ்சி | 1<br>1 | 2 |
| 31. | ✠ கண்ணப்பன்<br>✠ ஊனுக்கு ஊன் (அ) அறுவை மருத்துவம் | 1<br>1 | 2 |
| 32. | பகட்டான வாழ்க்கையைப் பாவம் என்கிறார் | 2 | 2 |
| 33. | ✠ கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டத்தில் உள்ள மருதூர்<br>✠ 05.10.1823 | 1<br>1 | 2 |
| 34. | ✠ மேனிலைக் கல்வி (அ) பன்னிரண்டாம் வகுப்பு | 2 | 2 |

Scanned by CamScanner

பிரிவு –III

(மதிப்பெண்கள் 24)

பகுதி – 1

| | | | |
|---|---|---|---|
| VII. எவையேனும் மூன்றனுக்கு மட்டும். | | 3 X4=12 | |
| 35. | ✠ புறாவின் துன்பத்தைப் போக்கிய சிபி மன்னன்.<br>✠ பசுவின் துயரை அறிந்து, தன் ஒப்பற்ற மகனையே தேர்ச் சக்கரத்தில் இட்டுக் கொன்ற மனுநீதிச்சோழன். | 2<br>2 | 4 |
| 36. | ✠ உள்ளத்து அன்பு முதிர்வினால் எழுந்த பரிவின் காரணமாக, குகன் கொண்டு வந்த மீனும் தேனும் கிடைத்தற்கு அரியன.<br>✠ அமுதத்தை விடச் சிறந்தன.<br>✠ அன்பு கலந்துள்ளதால் தூய்மையானவை.<br>✠ எம் போன்றோர்க்கும் உரியன. இனிமையான இவை நாம் விரும்பி உண்டதற்குச் சமம். | 1<br>1<br>1<br>1 | 4 |
| 37. | ✠ அரசரால் சிறப்புச் செய்யப் பெறுதல் செல்வமன்று.<br>✠ யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் விரைந்து செல்லுதலும் செல்வமன்று.<br>✠ அஃது முன்வினைப்பயன்.<br>✠ தன்னிடம் அடைக்கலமாக வந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் பண்பே செல்வமெனச் சான்றோர் கூறுவர். | 1<br>1<br>1<br>1 | 4 |
| 38. | ✠ நபிகள் நாயகத்தின் சீரிய வரலாற்றினை எடுத்து இயம்பும் நூல்.<br>✠ சீறா – வாழ்க்கை; புராணம்– வரலாறு<br>✠ விலாதத்துக் காண்டம், நுபுவ்வத்துக் காண்டம், ஹிஜ்ரத்துக் காண்டம் எனும் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டது.<br>✠ ஐயாயிரத்து இருபத்தேழு விருத்தப்பாக்களால் ஆனது. | 1<br>1<br>1<br>1 | 4 |
| 39. | ✠ செடிகள் பூப்பதற்கு முன் ஓய்வெடுப்பதில்லை.<br>✠ செடியின் வெற்றி பூவில் உள்ளதைப்போல், நமது வெற்றிகளால் துன்பங்கள் ஓடிவிடும்.<br>✠ பணியை முடித்து ஓய்வு பெறுக, தம்பி!<br>✠ இனிக்கும் செய்திகள் உன் மனத்தில் வந்து குவியும். | 1<br>1<br>1<br>1 | 4 |

பகுதி – 2

| | | | |
|---|---|---|---|
| VIII. எவையேனும் மூன்றனுக்கு மட்டும் | | 3 X4=12 | |
| 40. | ✠ பெண்கள் உரிமை பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டுமென்று விரும்பியவர் பெரியார்.<br>✠ ஆணுக்குப் பெண் இளைப்பில்லை.<br>✠ பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாய் இருத்தல் கூடாது.<br>✠ மனித சமுதாயத்திற்குத் தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாய் விளங்க வேண்டும். | 1<br>1<br>1<br>1 | 4 |

Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| 41 | ✠ 1908 – எல்பின்ஸ்டன் பள்ளி – உயர்நிலைப்பள்ளிப்படிப்பு<br>✠ 1912 – எல்பின்ஸ்டன் கல்லூரி– இளங்கலைப் பட்டம்<br>✠ 1915 – கொலம்பியா பல்கலைக்கழகத்தில் முதுகலைப் பட்டம்<br>✠ 1916 – இலண்டன் – முனைவர் பட்டம்<br>✠ அறிவியலில் முதுகலைப் பட்டம், பாரிஸ்டர் பட்டம் – இலண்டன். | 1<br>1<br>1<br>1/2<br>1/2 | 4 |
| 42 | ✠ கேட்போரை ஈர்க்கும் விதமாகத் தொடக்கம் அமைய வேண்டும்.<br>✠ சுருக்கமான முன்னுரையுடன் தொடங்கவேண்டும்.<br>✠ பேசத் தொடங்கிய ஓரிரு மணித்துளிகளில் பொருளுக்குள் சென்றுவிட வேண்டும்.<br>✠இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்ப, தொடக்கவுரை அமைதல் வேண்டும். | 1<br>1<br>1<br>1 | 4 |
| 43 | ✠தமிழர்கள் கடல்வாணிகத்தில் சிறந்து இருந்தனர்.<br>✠கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து, சாவக நாடுகளுடன் வாணிகம் செய்தனர்.<br>✠ பொன், மணி, துகில், முத்து ஆகியவற்றைக் கடல் கடந்து வாணிகம் செய்தனர்.<br>✠ அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும், மயில்தோகையும், வாசனைப்பொருள்களும் அனுப்பப்பட்டன. | 1<br>1<br>1<br>1 | 4 |
| 44. | ✠காந்தியடிகளைக் கவர்ந்த நாடகம் அரிச்சந்திர நாடகம்.<br>✠வாழ்நாள் முழுவதும் உண்மையை மட்டுமே பேசியவர் அரிச்சந்திரன்.<br>✠சுடுகாட்டில் பணிபுரியும் நிலையிலும் அவர் பொய் பேசவில்லை.<br>✠ அதைக்கண்ட காந்தியடிகள் உண்மை மட்டுமே பேசவேண்டும் என எண்ணினார். | 1<br>1<br>1<br>1 | 4 |
| | **பிரிவு –IV**<br>**(மதிப்பெண்கள் 10)** | | |
| **IX 45** | **கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க** | **5 X1=5** | |
| | i) தமிழ்விடு தூது.<br>ii) செவி + அறுத்து.<br>iii) பிள்ளைப்பாண்டியன்(அ) அதிவீரராம பாண்டியன்,<br>iv) கீழானவர் (அ) போலிப்புலவர்<br>v)✠ பாத்தனதா<br>கூத்தனிவர்<br>✠ குட்டி<br>வெட்டி | 1<br>1<br>1<br>1<br>1 | 5 |
| **46.** | **கீழ்க்காணும் உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க** | **5 X1=5** | |
| | i) ஒழுக்கம், கற்பு<br>ii) சமூக முரண்களையும் மூடக்கருத்துகளையும்<br>iii)சமூகத்தின் கண்களாக<br>vi)தொலைநோக்கு<br>v) ஒத்த ஒழுக்கமுடையவர்களாக | 1<br>1<br>1<br>1<br>1 | 5 |

Scanned by CamScanner

<table>
<tr><td colspan="4" align="center">பிரிவு – V<br>(மதிப்பெண்கள் 26)</td></tr>
<tr><td colspan="4" align="center">பகுதி – 1</td></tr>
<tr><td colspan="2">X . எவையேனும் ஒன்றனுக்கு மட்டும்.</td><td colspan="2">2 X8=16</td></tr>
<tr><td>47.<br>(அ)</td><td>ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்து.<br>✠ ஒருவற்கு அனைத்துச் சிறப்புகளையும் தர வல்லது ஒழுக்கம்.<br>எனவே உயிரினும் மேலானதாய்க் கருதிக் காக்க வேண்டும்.<br>✠ எவ்வகையில் பார்த்தாலும் ஒழுக்கமே நல்ல துணை.<br>எனவே, எப்பாடுபட்டாவது அதனைக் காக்கவேண்டும்.<br>✠ ஒழுக்கமுடையவரே உயர் குடியினர்.<br>ஒழுக்கமில்லாதவர் இழிகுடியினர்.<br>✠ கற்ற கல்வியை மறந்தால் மீண்டும் கற்றுக் கொள்ளலாம். ஒழுக்கம் குறைந்தால் குடிப்பிறப்பின் சிறப்பு அழியும்.<br>✠ பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது.<br>ஒழுக்கம் இல்லாதவனிடம் உயர்விருக்காது.<br>✠ ஒழுக்கம் தவறுவதால் வரும் குற்றங்களை உணர்ந்தோர்,<br>அவ்வொழுக்க நெறியில் இருந்து விலகார்.<br>✠ ஒழுக்கமுடையோர் மேன்மையடைவர்.<br>ஒழுக்கமில்லாதவர் பெரும்பழியை அடைவர்.<br>✠ நல்லொழுக்கம் நன்மை என்னும் விளைவைத் தரும் விதையாகும்.<br>தீயொழுக்கம் துன்பத்தையே விளைவாகத் தரும்.<br>✠ நல்லொழுக்கமுடையோர் தவறியும் தம் வாயால்<br>தீயசொற்களைப் பேசவியலாது.<br>✠ உயர்ந்தாரோடு பொருந்த வாழும் கல்வியைக் கல்லாதவர்,<br>எவ்வளவு கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே.</td><td></td><td>8</td></tr>
<tr><td>47.<br>ஆ)</td><td>கலித்தொகை கூறும் வாழ்க்கைநெறிமுறைகள்:<br>✠ இல்வாழ்வென்பது வருந்தி வந்தோர்க்கு உதவுதல்.<br>✠பாதுகாப்பதென்பது அன்புடையோரைப் பிரியாது வாழ்தல்.<br>✠ பண்பெனப்படுவது சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல்.<br>✠ அன்பெனப்படுவது சுற்றம் தழுவி வாழ்தல்.<br>✠ அறிவெனப்படுவதுஅறிவிலார் சொல்பொறுத்தல்.<br>✠ நெருக்கம் எனப்படுவது கொடுத்த வாக்கைக் காத்து நிற்றல்.<br>✠ நிறைவு எனப்படுவது பிறர் அறியாது மறைபொருள் காத்தல்.<br>✠ நீதிமுறைமை எனப்படுவது ஒருபால் கோடாது ஒறுத்தல்.<br>✠ பொறுமை எனப்படுவது இகழ்வாரையும் பொறுத்துக் கொள்ளல்.</td><td></td><td>8</td></tr>
</table>

Scanned by CamScanner

| | | | |
|---|---|---|---|
| 48. ஆ) | 1. தொன்மை<br>2. பிறமொழித் தாக்கமின்மை<br>3. தாய்மை<br>4. தனித்தன்மை<br>5. இலக்கிய வளம், இலக்கணச் சிறப்பு<br>6. பொதுமைப் பண்பு<br>7. நடுவுநிலைமை<br>8. பண்பாடு, கலை பட்டறிவு வெளிப்பாடு<br>9. உயர் சிந்தனை<br>10. கலை இலக்கியத் தனித்தன்மை வெளிப்பாடு<br>11. மொழிக் கோட்பாடு<br>**(இவற்றுள் ஏதேனும் ஐந்தினை விளக்கி எழுதியிருந்தால் மதிப்பெண் வழங்கலாம்)** | | 8 |
| 48. ஆ) | **கலை அறிவியல் கல்வி :**<br>* மேனிலைக் கல்வியில் தேர்ச்சி பெற்றோர் இளங்கலைப் பட்டமும் முதுகலைப் பட்டமும் பெறலாம்.<br>* இளம் கல்வியியல் பட்டம் பெற்றுப் பட்டதாரி ஆசிரியர் பணியைப் பெறலாம்.<br>* தமிழ்வழியில் பயிலும் மாணவர்களுக்கு அரசுப் பணிகளில் இருபது விழுக்காடு ஒதுக்கித் தமிழக அரசு ஆணை வெளியிட்டுள்ளது.<br>* பலதுறைகள் நடத்தும் போட்டித் தேர்வுகளில் கலந்துகொண்டு வெற்றி பெற்றுப் பல்வேறு வேலைவாய்ப்புகள் பெறலாம்.<br>**சிறுதொழில் கல்வி :**<br>* பத்தாம் வகுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள், பெறாதவர்கள் தொழிற் பயிற்சி நிறுவனங்களில் சேர்ந்து பயிற்சி பெற்றுப் பணியில் சேரலாம்.<br>* இத்தொழிற் பயிற்சி நிறுவனங்களில் கம்மியர், கடைசல் பிடிப்பவர், கட்டட வரைவாளர், நில அளவையாளர் தச்சர் முதலிய படிப்புகளும் இயந்திரம், வாகனம், தொலைக்காட்சி, குளிரூட்டும் கருவி, செல்பேசி, கணினி முதலியவற்றைப் பழுது பார்க்கும் படிப்புகளும் உள்ளன.<br>* அரசுப் பணிக்காகக் காத்திராமல் அவரவர் சுயதொழில் தொடங்கிப் பலரும் வேலைவாய்ப்பைப் பெருக்குதல் வேண்டும்.<br>* சுயதொழில் தொடங்குவதற்கு வழிகாட்டுதல்கள், பயிற்சிகள், கடனுதவிகள் முதலியவற்றை அரசு அளிக்கிறது. | | 8 |

Scanned by CamScanner

| பகுதி – 2 | | | |
|---|---|---|---|
| செய்யுள் வடிவில் விடை தருக. | | 2+2+6 = 10 | |
| 49) | திருக்குறள் | | |
| அ) | நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்<br>என்றும் இடும்பை தரும். | 2 | |
| ஆ) | குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்<br>றுண்டாகச் செய்வான் வினை | 2 | 10 |
| இ) | சிலப்பதிகாரம்<br><br>வாயிற் கடைமணி நடுநா நடுங்க<br>ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுசுடத் தான்தன்<br>அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்<br>பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்<br>ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி<br>மாசாத்து வாணிகன் மகனை யாகி<br>வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்<br>சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்தீங்<br>கென்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்<br>கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி | 6 | |

*******

Scanned by CamScanner